# நற்றிணைத் தலைவியின் அன்புநிலை

**செ.பிரிசில்லா**
முனைவர் பட்ட ஆய்வாளர்,
அரசு கலைக் கல்லூரி(தன்னாட்சி),
கோயம்புத்தூர்- 641018.

**ஆய்வுச்சுருக்கம்**

சங்கத்தின் ஆதி வரலாறு “இறையனார் களவியல் உரை” என்னும் அகப்பொருள் நூலின் வழியாக வெளிப்படுகின்றது. அந்நூலின் காலம் 8-ஆம் நூற்றாண்டிற்கு முந்தையதாகும். அதனுள் ஒன்றன் பின் ஒன்றாக எழுந்த மூன்று சங்கங்கள் கூறப்பட்டுள்ளன. பண்டையக் காலத் தமிழ்க் குடியின் தொன்மையையும் சிறப்பையும் கூறும் விதமாக அமைவது தமிழ் மொழியும் அதன் இலக்கியமுமாகும். பழங்காலத்தமிழ் மக்கள் வாழ்ந்த வரலாற்றிற்கு மூலமாக விளங்குவது சங்க இலக்கியமாகும். ஆனால், சங்க காலத்தை வரையறுப்பது பல்வேறு வகையான சங்க நூல்களில் இருக்கும் வரலாற்று செய்திகளை நுட்பமாக ஆராய்ந்தெடுப்பதும் எளிமையான செயல் அல்ல என்று பலரும் குறிப்பிடுகின்றனர். சங்க இலக்கியம் அகம், புறம் என இரண்டு பிரிவாக பாடல்களின் கரு அடிப்படையில் பிரிக்கப்பட்டுள்ளதைப் போலவே இலக்கிய ஆய்வுலகிலும் அந்த பாகுபாடு, இலக்கியக் கோட்பாட்டு அடிப்படையில் தொல்காப்பியரால் மிகவும் சிறப்பாக விளக்கப்பட்டுள்ளது. 'அகப்பாடல்' என்ற தொடர் சங்க இலக்கிய அகப்பாடல்களையே நினைவுபடுத்துகின்றது. அதற்கு காரணம் அவை பல வகைகளில் தனிச்சிறப்பு வாய்ந்தவை. சங்க இலக்கியம் தமிழின் முதல் இலக்கியமாகும். அதில் பெரும்பான்மையானவை அகப்பாடல்களே அமைந்துள்ளன. எட்டுத்தொகை நூல்களில் நற்றிணை. குறுந்தொகை, ஐங்குறுநாறு, கலித்தொகை, அகநானூறு ஆகிய ஐந்து நூல்கள் அகம் பற்றியவையாகும். அகப்பாடல்களில் பல தனித்துவம் உடையவையாகும். தனி மனிதனின் நுண்ணிய காதல் உணர்வை சுருக்கமாக அதே சமயத்தில் ஆழமாக வருணிப்பவையாகும். இயற்கை வருணணையாக அமைந்தவை, குறிப்புப் பொருள் உடையவை. தலைவி தன் தலைவனை பிரிந்த போதும் தன் மனம் கோணாது தலைவன் வருவான் என்னும் சிறு நம்பிக்கையில் வாழ்ந்து எந்நிலையிலும் அவள் தன் அன்பு நிலையிலிருந்து விலகவில்லை. அவளின் அன்பு தனித்துவமானதாக இருந்தது. இத்துணை சிறப்புடைய நற்றிணைத் தலைவியின் அன்பு நிலையினை பல்வேறு நிலைகளில் ஆராய்வதாக இவ்வாய்வு அமைகின்றது.

## முன்னுரை

நற்றிணைப் பாடல்கள் வாயிலாக அக்கால மக்களிடம் பரவிக்கிடந்த பழக்க வழக்கங்களை அறியலாம். தலைவன் பிரிவால் வாடும் தலைவி, தன் தலைவனின் வரவைச் சுவரில் கோடிட்டுக் கணக்கிடும் பழக்கமும் காதலன் வரவைப் பல்லி கத்தும் ஓசையை வைத்துச் சகுனம் பார்க்கும் வழக்கமும் அக்கால மக்களிடம் இருந்த நம்பிக்கையைக் காட்டுகிறது. மேலும் மகளிர் காற்பந்து விளையாடும் வழக்கமும் இருந்ததை அறியமுடிகிறது. பிற்காலத்தில் சிறந்து விளங்கிய “தூது” என்ற சிற்றிலக்கியத்திற்கு வழிகாட்டியாகக் குருவி, கிளி, நாரை ஆகியவற்றைத் தூதுவிடும் பாங்கையும் நற்றிணையில் காணலாம். மேலும் மன்னர்களின் ஆட்சிச் சிறப்பு, கொடைத்திறம், மன்னர்களைப் பின்பற்றி மக்கள் வாழ்ந்த அறவாழ்வு ஆகியவற்றை அறியவும் நற்றிணைப் பாடல்கள் துணை செய்கின்றன. அத்தகைய நற்றிணைப் பாடலில் தலைவியின் அன்புநிலையின் தன்மையைக் குறித்து இங்கு விரிவாகக் காண்போம்.

### நற்றிணை

குறுந்தொகை அடிகளிலும் மிக்கு, ஒன்பதடிச் சிற்றெல்லையும் பன்னிரண்டடிப் பேரெல்லையும் கொண்ட பாடல்களின் தொகுதி **நற்றிணை**. திணை என்னும் சொல் ஆகுபெயராய் அகத்திணை நூலைக் குறிக்கிறது. 'திணை எழுபது' முதலிய நூற்பெயரிலும் இத்தன்மையைக் காணலாம். சிறிய பாடல்களும் இன்றிப் பெரிய பாடல்களும் இன்றி அளவான பாடல்களைப் பெற்றமையால் இத்திணை, நல் என்னும் அடைமொழி பெற்று 'நற்றிணை'யாயிற்று, என்பர். இதன்கண் கடவுள் வாழ்த்து நீங்கலாக 400 **பாடல்கள் உள்ளமையால் இது 'நற்றிணை நானூறு' எனவும் வழங்கப்பட்டது**. எனினும், 234ஆம் பாடல் எனச் சிலரும், இறையனார் அகப் பொருள் உரையில் மேற்கோளாக வரும், 'சான்றோர் வருந்திய வருத்தமும்' எனத் தொடங்கும் பாடலே மறைந்து போன நற்றிணைப் பாடல் எனச் சிலரும் கூறுவர். 385ஆம் பாடலின் பிற்பகுதி மறைந்து போனது. 56 பாடல்களைப் பாடிய புலவர்கள் பெயர் தெரியவில்லை. **நற்றிணையைத் தொகுப்பித்தவன், பன்னாடு தந்த பாண்டியன் மாறன் வழுதி**. **தொகுத்தவர் பெயர் ஏட்டில் இல்லை**. நற்றிணையை **1914-இல் உரை எழுதிப் பதிப்பித்தவர், பின்னத்தூர் அ. நாராயணசாமி ஐயர்**. பின்னே ஔவை சு. துரைசாமி பிள்ளை விளக்கமான பேருரை வகுத்துள்ளார்.

### சிறப்புகள்

- நற்றிணைப் பாடல்களின் கற்பனை அழகையும் கவிநயத்தையும் வியந்தே, எட்டுத்தொகைப் பெயர்கள் கூறும் வெண்பா பாடிய புலவன் இதனை முதலில் வைத்துள்ளான் எனற கருத்து மேலோங்குகிறது.
- **நற்றிணைப் பாடல்கள் அகப்பாடல்களாக இருப்பினும், அவற்றில் புறத்தின் கூறுகளாக மன்னர்கள், வள்ளல்கள், வீரர்கள் பற்றிய செய்திகளும் இடம் பெற்றுள்ளதால், காதலுடன் வீரமும் கலந்த கவிச்சுவை சிறப்பின் சிகரமாகிறது.**
- நற்றிணைப் பாடல்கள் அக்காலச் சமூகத்தை அறியப் பெரிதும் துணைபுரிகின்றன. மன்னர்களின் ஆட்சிச் சிறப்பும், கொடைத்தன்மையும், கல்வியாளர்களின் சிறப்பும், மக்களின் வாழ்க்கை முறையும், நம்பிக்கைகளையும், சடங்குகளையும், மனிதநேயத்தையும், செடிகளையும், கொடிகளையும், பறவை களையும், விலங்குகளையும் நேசித்து தன் அன்பை வெளிப்படுத்துகிற பாங்கைக் கொண்டவர்களாகத் திகழ்ந்திருக்கிறார்கள் பண்டைய மன்னர்கள்.
- குலத்தால் உயர்ந்தோர், தாழ்ந்தோர் என்கிற ஏற்ற இறக்கம் பார்க்காமலும், சமயசார்பற்ற தன்மையையும், தன்னை நம்பி வந்தவர்களைக் கைவிடாதிருத்தலும், எடுத்துக் கொண்ட செயலை முடித்தே காட்டுகின்ற வீரத்தின் விளைநிலத்துக்கு இலக்கணமாகவும் விளங்கினர் என்பதை நற்றிணை எடுத்துக்கூறுகிறது.
- **'நீரின்றமையாவுலகு', 'பெயக்கண்டும் நஞ்சுண்டு அமைவர்', 'விருந்தோம்பல்'** போன்ற குறள் கருத்துகள் பலவற்றிற்கு மூலம் நற்றிணையே.
- உவமைத்திறம், உள்ளுறை, இறைச்சிப் பொருள்களின் அமைப்பு என இலக்கியச் சுவையும் மிகுந்ததாக நற்றிணைப் பாடல்கள் திகழ்கின்றன.
- அறக்கருத்துக்களின்உறைவிடமாகவும், அன்புவாழ்க்கையின்ஆணிவேராகவும், பண்பட்டமற்றும்பண்பாடுடைய மக்களைஉருவாக்கவும்நற்றிணைபாடல்கள்துணைபுரிகின்றன.
- நற்றிணைப் பாடல்களை வாசிக்கும் போது, மனதில் ரீங்காரமிட்டு பறக்கும் பறவைகளின் சிறகுகளைப் பெற்று பறப்பதைப் போன்ற உணர்வுகள், நம் உள்ளத்தில் ஊடுருவும்தனிச்சிறப்புடையது.

## தலைவியின் அன்புநிலை

நற்றிணையில் அகவாழ்வில் வரும் அகச்சிந்தனையின் பரிமாணம், புறவாழ்விலும் வெளிப்படுவது என்பது இயல்பான ஒன்றுதான். சிறந்ததொரு அக இலக்கியமான நற்றிணையில் ஆண், பெண் உறவுகளின் மேன்மைகளும், மென்மைகளும் பாத்திரப் படைப்புகளில் பற்றிப் படர்ந்து காதலாய் கசிந்துருகி ஆனந்தக் கண்ணீர் பெருக்கெடுக்கின்ற இடங்கள் நிறைய உள்ளன. தலைவன் தலைவியாக, காதலன் காதலியாக, கணவன் மனைவியாக அன்பின் வயப்பட்டு வாழ்வின் திரும்பிய பக்கமெல்லாம் நெறி பிறழாத நிறை காதலை மையப்படுத்துகின்ற சிறந்த நூல் நற்றிணை ஆகும்.

ஆணும் பெண்ணும் ஒருவர் மீது ஒருவர் காதல் வயப்பட்டிருந்தால் '**கைக்கிளை**' எனவும், இருவரும் ஒருவருக்கொருவர் காதல் பரிமாறி இல்வாழ்வு அமைப்பதை '**களவு**' எனவும், இருவரும் இணைந்து மணவாழ்வில் கலந்து மக்கள் பேறைப் பெற்று, விருந்தோம்பலில் சிறந்து விளங்கி, பொருளீட்டலில் வாழ்வை நிறைவு செய்து இறை அச்சத்தையும், வாழ்வின் மீதான உச்சத்தையும் தொடுவது '**கற்பு**' என்கிற நெறி சார்ந்த வாழ்வுதான் ஆதாரம் என்பதை நமக்கு எடுத்துக்கூறும்நூல்நற்றிணையே. இத்தகைய நற்றிணைத் தலைவியின் அன்புநிலைகள் பின்வருமாறு:

1. அன்பினால் புணர்தல்
2. அன்புடன் பிரிதல்
3. கூடியும் பிரிந்தும் அன்புடன் இருத்தல்
4. கூடி இருந்தால் அன்பால் ஊடுதல்
5. பிரிந்திருந்தால் அன்பினால் இரங்கல்

## அன்பினால் புணர்தல்

பொருள் வயின் பிரிந்த தலைவனை நினைத்து வருந்தி மெலியும் தலைவி, தான் இறக்க நேரும் என்பதை எண்ணி அஞ்சவில்லை; இறந்தபின் எடுக்கும் மறுபிறவியில் தலைவனை மறக்க நேருமோ என்றே அஞ்சுகிறாள்.

> **"சாதல் அஞ்சேன் அஞ்சுவல் சாவில்**
> **பிறப்புப் பிறிது ஆகுவது ஆயின்**
> **மறக்குவேன் கொல்லென் காதலன்"**

(நற்றிணை: 397)

இம்மைக்கும் ஏழேழ் பிறவிக்கும் தன் தலைவனே தொடர்ந்து கணவனாக அமைய வேண்டும் என்று அவாவுநிலைதலைவியைதலைவனோடு அன்புடன்புணரவைக்கிறது.

> **"ஐயவி அன்ன சிறுவீ ஞாழல்**
> **செவ்வீ மருதின் செம்மலொடு தாஅய்த்**
> **துறைஅணிந் தன்றவ ரூரே யிறையிறந்**
> **திலங்குவளை ஞெகிழச் சாஅய்ப்**
> **புலம்பணிந் தன்றவர் மணந்த தோளே."** (நற்றிணை: 50)

மனைவியைப் பிரிந்து கணவன் பரத்தையரோடு வாழ்ந்து வருகிறான். அவன் மீண்டும் தன் மனைவியோடு வாழ விரும்பி, தூதுவன் ஒருவனை மனைவியிடம் அனுப்புகிறான். மனைவி கணவன் மீது கோபமாக இருக்கிறாள். "அவர் அழகான இடத்தில் மகிழ்ச்சியாக இருக்கிறார்.

நான் உடல் மெலிந்து தனிமையில் வாடுகிறேன்" என்று தன் கோபத்தையும் வருத்தத்தையும் மனைவி தூதுவனிடம் கூறும் நிகழ்வும் தலைவியின் அன்பு நிலையைக் காட்டுகிறது.

**அன்புடன் பிரிதல்**

தலைவனும் தலைவியும் ஒருவரை ஒருவர் மிகவும் காதலிக்கிறார்கள். தன் மகளின் களவொழுக்கத்தை அறிந்த தாய், தலைவியைக் கடுமையான காவலில் வைத்தாள். தலைவனைக் காணமுடியாததால், தலைவி மிகவும் வருந்துகிறாள். பிரிவினால் வாடும் தலைவிக்கு ஒவ்வொரு விநாடியும் ஒரு யுகம் போல் தோன்றுகிறது. இந்தப் பிரிவினால் உண்டாகும் வருத்தத்தைத் தவிர்ப்பதற்கு ஒரேவழி, தலைவனும் அவளும் ஒருங்கே இறப்பதுதான் என்று தலைவி தோழியிடம் கூறும்பாடல்பின்வருமாறு:

**"பூவிடைப் படினும் யாண்டு கழிந்தன்ன**
**நீருறை மகன்றிற் புணர்ச்சி போலப்**
**பிரிவரி தாகிய தண்டாக் காமமொடு**
**உடனுயிர் போகுக தில்ல கடனறிந்**
**திருவேம் ஆகிய வுலகத்**
**தொருவே மாகிய புன்மை நாம் உயற்கே."** **(நற்றிணை:** 57)

தோழி, செய்ய வேண்டிய கடமைகளுக்காக இருவேறு உடல் உடையவர்களாக இந்த உலகத்தில் நானும் தலைவனும் இருந்தாலும் உள்ளத்தால் இணைந்து ஓருயிர் ஈருடலாகக் கருத்தொருமித்த காதலர்களாக இருந்தோம். இப்பொழுது, ஒருவரை ஒருவர் சந்திக்க முடியாத சூழ்நிலையில் பிரிந்து வாழ்கிறோம். நீரில் எப்பொழுதும் சேர்ந்தே இருக்கும் மகன்றில் பறவைகள், பூ இடையே வந்ததால் சிறிது நேரம் பிரிய நேரிடும் பொழுது, அந்தப்பிரிவு ஓராண்டுகாலம் கடந்தாற் போல அப்பறவைகளுக்குத் துன்பத்தை உண்டாக்குமாம். இந்தப் பிரிவினால் நாங்கள் அந்தப் பறவைகளைப் போல வருந்துகிறோம். இந்தத் துன்பத்திலிருந்து தப்புவதற்கு ஒரேவழி, பிரிதலே இல்லாமல், நீங்காத காதலோடு எங்கள் இருவரின் உயிரும் ஒருங்கே போகட்டும்.

**கூடியும் பிரிந்தும் அன்புடன் இருத்தல்**

திருமணத்திற்குப் பொருள் தேடுவதற்காகத் தலைவன் தலைவியைவிட்டுப் பிரிந்து சென்றிருக்கிறான். தலைவனின் பிரிவால் தலைவி வருந்துவாள் என்று எண்ணித் தோழி அவளுக்கு ஆறுதல் கூறுகிறாள். ஆனால், தலைவி "பிரிவால் நான் வருந்துவதாக நீ நினைக்கிறாய். நான் வருந்துவது உண்மைதான். அதைவிட, என்னைப் பிரிந்து சென்ற தலைவர் எவ்வாறு துன்பப்படுகிறாரோ என்று நினைத்து என் நெஞ்சு இடைவிடாமல் வருந்துகிறது" என்று கூறுகிறாள் என்று பின்வரும் பாடல் குறிப்பிடுகிறது.

**"தா அம் சிறை நொப்பறை வாவல்**
**பழுமரம் படரும் பையுள் மாலை**
**எமியம் ஆக ஈங்குத் துறந்தோர்**
**தமியர் ஆக இனியர் கொல்லோ?**
**ஏழூர்ப் பொதுவினைக்கு ஓரூர் யாத்த**
**உலை வாங்கு மிதிதோல் போலத்**
**தலைவரம்பு அறியாது வருந்தும் என் நெஞ்சே."**
(நற்றிணை: 172)

தோழி! வலிமையையுடைய அழகிய சிறகையும், மென்மையாகப் பறக்கும் இயல்பையும் உடைய வௌவால்கள், பழுத்த மரங்களை நோக்கிச் செல்லும், தனியாக இருப்பவர்களுக்குத் துன்பத்தைத் தரும் மாலைக் காலத்தில், நாம் தனியாக இருக்கும்படி, இங்கு எம்மைவிட்டுப் பிரிந்த தலைவர், தாம் தனிமையாக இருப்பதால் மகிழ்ச்சியாக இருப்பாரோ? ஏழு ஊரில் உள்ளவர்களுக்குப் பொதுவாகப் பயன்படும்படி, ஓர் ஊரில் அமைத்த, கொல்லன் உலையில் பொருத்திய துருத்தியைப் போல, எல்லையில்லாத் துன்பத்தை அடைந்து என் நெஞ்சு வருந்துகிறது என்று கூடியும் பிரிந்தும் இருக்கும் போது தலைவி தன் அன்புநிலை மறவாமையைக் காட்டுகிறது.

**கூடி இருந்தால் அன்பால் ஊடுதல்**

தலைவன் பிரியக் கருதியதை அறிந்த தோழி தலைவியிடம் அதனைத் தெரிவிக்கிறாள். தலைவனது அன்பையும் மனப்போக்கையும் நன்கறிந்திருக்கும் தலைவி, அவன் பிரியமாட்டான் என உறுதியாகக் கூறுகிறாள்.

**“நின்ற சொல்லர்; நீடுதோன்று இனியர்;**
**என்றும் என் தோள் பிரிபு அறியலரே’**
**தாமரைத் தண் தாது ஊதி, மீமிசைச்**
**சாந்தில் தொடுத்த தீம் தேன் போல,**
**புரைய மன்ற, புரையோர் கேண்மை;**
**நீர் இன்று அமையா உலகம் போலத்**
**தம் இன்று அமையா நம் நயந்தருளி,**
**நறு நுதல் பசத்தல் அஞ்சிச்**
**சிறுமை உறுபவோ? செய்பு அறியலரே!”** (நற்றிணை: 1)

“தோழி என் காதலர் சொன்ன சொல்லைத் தவறாமல் காப்பாற்றக் கூடிய வாய்மையுடையவர். நீண்ட காலம் பழகுவதற்கு மிக இனிமையானவர். எப்போதும் என் தோள்களைப் பிரியும் எண்ணம் இல்லாதவர். அத்தகையவருடைய நட்பு, தேனீக்கள் தாமரையின் குளிர்ந்த மகரந்தங்களை ஊதி, உயர்ந்து நிற்கும் சந்தன மரத்தின் தாதினையும் ஊதி, சந்தன மரத்தின் உச்சியில் கொண்டு சென்று சேர்த்து வைத்த தேனைப் போல உறுதியாக உயர்ந்தது. தண்ணீர் இல்லாமல் இவ்வுலகம் இயங்காதது போல, அவர் இல்லாமல் நான் வாழ மாட்டேன் என்பதை நன்கு உணர்ந்தவர். என் மீது மிகுந்த விருப்பம் கொண்டவர். என்னைப் பிரிந்து சென்றால் என் நெற்றியில் பசலை நோய் படரும் என்று அஞ்சி தடுமாற்றம் அடைந்து என்னை விட்டு நீங்கிச் செல்ல மாட்டார்” என்று தலைவி கூறுகின்றாள்.

**பிரிந்திருந்தால் அன்பினால் இரங்கல்**

தலைவன் தான் வருவதாகக் குறித்த பருவம் வந்தும் அவன் வரவில்லை; அதனால் ஆற்றாளாகிய தலைமகள் தோழியிடம் தன் வருத்தத்தைத் தெரிவிக்கிறாள்.

**“இன்ன ளாயினள் நன்னுதல் என்றவர்த்**
**துன்னச் சென்று செப்புநர்ப் பெறினே**
**நன்றுமன் வாழி தோழிநம் படப்பை**
**நீர்வார் பைம்புதற் கலித்த**
**மாரிப் பீரத் தலர்சில கொண்டே.”** (நற்றிணை: 98)

தலைவி தோழியை நோக்கிப் பேசுகிறாள் : 'தோழி ! நம்வீட்டுத் தோட்டத்தில் மழை வடிகின்ற இடத்திலுள்ள பீர்க்கு பசும்புதர் மீது படர்ந்து தழைத்திருக்கிறது. மாரிப்பருவத்தில் மலர்வதாகிய அதன் மலர்கள் சிலவற்றை எடுத்துக்கொண்டு தலைவரை நெருங்கிச் சென்று, 'முன்பு அழகிய நெற்றியையுடையவளாயிருந்த உங்கள் தலைவி இப்போது இந்தப் பூக்களின் நிறத்தை அடைந்திருக்கிறாள்' என்று சொல்லக் கூடிய யாரேனும் கிடைத்தால் நன்றாயிருக்கும் ; அப்படியாரும் இல்லையே !'.

இப்பாடல், பிரிவினால் தலைவிக்கு ஏற்பட்டுள்ள பசலை நோயைப் பற்றி மட்டுமே பேசுகிறது. தலைவனைப் பிரிந்திருப்பதால் தலைவியின் உடலில் தோன்றும் ஒருவிதமான வெளிர் மஞ்சள் நிறத்தையே பசலை என்பர். பீர்க்கம்பூ இந்நிறமாதலால் பசலைக்குப் பீர்க்கம் பூவை உவமை கூறுவது வழக்கம். தலைவனிடம் சென்று 'தலைவி பசலை நோய் கொண்டிருக்கிறாள்' என்று வெறும் கூற்றாகக் கூறுவதைவிடப் பீர்க்கம்பூவைக் காட்டி 'இதுபோல ஆகிவிட்டாள்' என்று கூறும்போது தலைவன் மனதில் ஏற்படும் பாதிப்பு அதிகமாக இருக்கும் என்பதை அறிந்தும் தலைவன் மீது தலைவி வைத்துள்ள அன்புநிலை என்றும் குறையாமல் இருப்பதைக் குறிக்கிறது.

## முடிவுரை

சங்ககாலத் தமிழர்கள் சாதி என்கிற கூட்டுக்குள் சிக்கி விடாமல், ஒருமைப்பாட்டு சமுதாயமாய் திகழ்ந்து மணவாழ்வில் கலந்து நிற்பதை பல காட்சிப் பாத்திரங்கள் நம் கண் முன்நின்று வியப்பு மேலோங்க விளக்குகின்றன. மணமான பின்பு கருத்தொற்றுமைப்பட்டு வாழ்க்கை நெறி பிறழாமல் வாழ்வதே கற்பு நெறி கொண்ட வாழ்வின் அடிப்படைக் கூறுகளாகும். இத்தகைய வாழ்வே பெருவாழ்வாக மலர்ந்து மணவாழ்க்கைக்கு செம்மையுறுகிற கீர்த்தியைப் பெற்றுத் தருகிறது. இதன் வாயிலாக அறம் வளர்கிறது. இன்பம் கிளை விட்டுப் பரவுகிறது. ஒன்றிய உணர்வும், ஒத்த கருத்தும் இல்லற வாழ்வின் அடித்தளம் என்பதை எடுத்துச் சொல்கிற சங்கப் புலவர்களின் பாடல்கள் நற்றிணையின் வாயிலாக நிறைந்து வழிகிறது.

காதலாய் கண்ணீர் மல்கி கசிந்து உருகுகிற, காதல் தேரில் ஏறி பவனி செல்லும் காதல் பாடல்களை நில ஊறித் ததும்பும் கண்களாய் காதல் வயப்படுகிறது. இக்காதல் ஒழுக்க நிகழ்வுகளை நமது முப்பாட்டன் தமிழ்ச் சான்றோன், அன்பினால் புணர்தல், அன்புடன் பிரிதல், கூடியும் பிரிந்தும் அன்புடன் இருத்தல், கூடி இருந்தால் அன்பால் ஊடுதல், பிரிந்திருந்தால் அன்பினால் இரங்கல் என ஐந்தாக வகுத்து இவை ஒவ்வொன்றையும் அடிப்படையாகக் கொண்டு அகப்பாடல்களாகப் பாடினர்.சங்கத் தமிழர்கள் உயர்ந்தோர், தாழ்ந்தோர் என்கிற பாகுபாட்டை உடைத்தெறிந்திருக்கிறார்கள்.சமுதாயத்தின் ஒற்றுமையைப் பேணி வளர்த்தெடுத்திருக்கிறார்கள். ஒற்றுமை சமுதாயத்தில் ஆணும், பெண்ணும் மணவாழ்வின் ஒழுக்க நெறிகளை வரையறுத்து மகிழ்ந்திருக்கிறார்கள். மணவாழ்வின் இன்பம் என்பது இருவர் உள்ளம் ஒன்றாகக் கலந்து காதலால் அன்பின் நெருக்கத்தையும், அரவணைப்பின் குறுக்கத்தையும் பல்வேறு பாடல்கள் வெளிப்படுத்தி இருக்கின்றன. நற்றிணையில் தலைவியின் அன்பு எந்நிலையிலும் தன் இல்லறவாழ்வில் மகிழ்ச்சி ததும்பும்படியும், எத்தகு சூழ்நிலையிலும் தன் தலைவனை பிரியாமல் இருத்தலையும் காட்டுகிறது. இக்காலமக்கள் இல்லறவாழ்வை நன்முறையில் அன்போடு நடத்த நற்றிணைப் பாடலில் தலைவியின் அன்புநிலை நமக்கு எடுத்துரைக்கிறது.

## குறிப்புதவி நூல்கள்

1. நாராயணசாமி ஐயர் .அ நற்றிணை நானூறு சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,திருநெல்வேலி,சென்னை-1. வெளியீடு - 2001
2. லோகசுந்தரம் என். தே மற்றும் நற்றிணை எட்டுத்தொகை நூல்கள் செல்வநாயகி மதுரை தமிழ் இலக்கியமின் தொகுப்புத் திட்டம் செயல்திட்டம் மதுரை - 1998 – 2008
3. பரமசிவம் த.கோ. நற்றிணை மூலமும் உரையும் எடுத்துக்காட்டுப் படிவம் தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்
4. ராஜம் மர்ரே எஸ். நற்றிணை நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை
5. புலியூர்க் கேசிகன் நற்றிணைபாரி நிலையம், 194, பிராட்வே, சென்னை.